


மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம். முருகன் தனது பூம்புகார் தொகுதி செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியத்தில் வாக்காளர்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார். உடன் தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், குத்தாலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.ஆர்.ராஜா, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம். அன்பழகன், மங்கை எம்.சங்கர், எம். அப்துல்மாலிக் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



ஒன்றிய அரசு பெட்ரோல் மற்றும் டீசல் விலையை கடுமையாக உயர்த்தியதைக் கண்டித்து தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்தும், பெட்ரோல், டீசல் விலை உயர்வால் விலைவாசி உயரும் அபாயம் உள்ளதையும், விலை உயர்வை திரும்பப் பெற வலியுறுத்தியும் சென்னை எழும்பூரில் உள்ள இராஜரத்தினம் ஸ்டேடியத்தில் 18.04.2026 அன்று மாலை 4 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் உள்ளிட்ட அனைத்து மத்திய தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

### நிலத்தை அதிகாரிகள் அளவீடு செய்யாததால் – கிருஷ்ணகிரி

# மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தீக்குளித்த மாற்றுத்திறனாளி சாவு!

## மாஜிஸ்திரேட்டிடம் மரண வாக்குமூலம்; உடலை வாங்க மறுத்து உறவினர்கள் தர்ணா!

சேலம், மே 24 -

கிருஷ்ணகிரியில் நிலத்தை அதிகாரிகள் அளவீடு செய்யாததால் கலெக்டர் அலுவலகத்தில் தீக்குளித்த மாற்றுத்திறனாளி, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது உடலை வாங்க மறுத்து சேலம் கலெக்டர் அலுவலகம் முன் உறவினர்கள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி தாலுகா தியாகரசனப்பள்ளி அருகே மாதரசனப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர் வெங்கடேஷ் (45), மாற்றுத்திறனாளி.

விவசாயியான இவர், கடந்த திங்கட்கிழமை கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்திற்கு வந்து, நிலபிரச்சினைக்கு உரிய முறையில் அளவீடு செய்து தராத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, கோஷமிட்டவாறு உடலில் பெட்ரோல் ஊற்றி தீக்குளித்தார். இதில் பலத்த காயமடைந்த வெங்கடேசை, பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் மீட்டு, கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். பின்னர், மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி வெங்கடேஷ் உயிரிழந்தார்.

இதுபற்றி கிருஷ்ணகிரி தாலுகா போலீசார், வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் காலை, வெங்கடேசின் உடலை பிரேதப் பரிசோதனை செய்வதற்கான ஏற்பாடுகளை போலீசார் செய்து, அவரது குடும்பத்தாரிடம் பேசினர். அப்போது, வெங்கடேசின் மனைவி திம்மக்கா, மகள்கள் ஷர்மிளா, சங்கீதா, மகன் சதீஷ் மற்றும் உறவினர்கள், வெங்கடேஷ் சாவுக்கு நீதி கிடைக்கும் வரை உடலை வாங்க மாட்டோம் எனக்கூறினர்.

தொடர்ந்து மனைவி, மகள்கள் மற்றும் உறவினர்கள் 15க்கும் மேற்பட்டோர், சேலம் கலெக்டர் அலுவலகத்திற்கு வந்து, அதிகாரிகளிடம் புகார் மனு கொடுத்தனர். பின்னர், கலெக்டர் அலுவலக நுழைவாயில் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். வெங்கடேசின் மகள் ஷர்மிளா நிருபர்களிடம் கூறியதாவது: எனது தந்தைக்கு சொந்தமான நிலத்தை அளவீடு செய்து தரக்கோரி, அதிகாரிகளிடம் 2 முறை மனு அளித்த போதும், உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

பிறகு அளவீடு செய்வது போல், நிலத்தில் வந்து நின்று விட்டு, திரும்பி சென்று விட்டார்கள். 3வது முறையாக அரசு அதிகாரிகளை சந்தித்து முறையிட்டார். அங்கு என்ன நடந்தது எனத்தெரியவில்லை. அதன்பிறகு எனது தந்தை கடும் மனஉளைச்சலுக்கு ஆளாகி வேதனையில் இருந்தார். திங்கட்கிழமையன்று கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்துக்கு சென்று தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். தற்போது அந்த நிலத்தை அளவீடு செய்து முடித்து விட்டதாகவும், அதற்கான ஆவணங்கள் இருப்பதாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

அந்த ஆவணத்தில், எனது தந்தை கையெழுத்து போட்டிருப்பதாக கூறுகின்றனர். எனது தந்தைக்கு எழுத, படிக்க தெரியாது. அவர் கையெழுத்து போடமாட்டார். அவர் கைரேகை மட்டுமே வைப்பார். அந்த ஆவணங்கள் அனைத்தும் போலியானவை. அதனால், தந்தை வெங்கடேஷ் சாவுக்கு காரணமான அதிகாரிகள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும் வரை உடலை பெற்றுக்கொள்ள மாட்டோம். இவ்வாறு அவர் கூறினார்.

இதையடுத்து தர்ணாவில் ஈடுபட்டவர்களிடம் சேலம் டவுன் போலீசாரும், கிருஷ்ணகிரி தாலுகா இன்ஸ்பெக்டர் மணிமாறனும் பேச்சுவார்த்தை நடத்தினர். வெங்கடேஷ் இறப்பதற்கு முன்பு மாஜிஸ்திரேட்டிடம் மரண வாக்குமூலம் அளித்துள்ளார். அதனால் அவர், யார் மீதெல்லாம் புகார் தெரிவித்து இருக்கிறாரோ அவர்கள் மீது கட்டாயம் நடவடிக்கை எடுப்போம் என்று உறுதி கூறினர். அதை ஏற்று வெங்கடேசின் உறவினர்கள், தர்ணா போராட்டத்தை கைவிட்டனர்.

### உழைப்பாளிகளின் தலைவர்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை எழுச்சியோடு கொண்டாடுவோம்!

## தொ.மு.ச.வினருக்கு – பேரவைப் பொதுச் செயலாளர் மு.சண்முகம் வேண்டுகோள்!

சென்னை, மே 24 -

தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு. சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



தமிழ்நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவரும் தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதாரத் துறையில் முன்னணி மாநிலமாக மாற்றியவரும் மாணவர் நலன், பெண்கள் முன்னேற்றம், அரசு ஊழியர், ஆசிரியர்கள், தொழிலாளர் நலன்களில் தீவிர கவனம் செலுத்தியவரும், அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனில் மிகுந்த அக்கறையெடுத்து அமைப்புசாரா நல வாரியங்களை உருவாக்கியவரும், போக்குவரத்துக் கழகம், நுகர் பொருள் வாணிபக் கழகம், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு தேயிலை வாரியம், தமிழ்நாடு சிமெண்ட் வாரியம், தமிழ்நாடு சர்க்கரை வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் போன்ற பொதுத்துறைகளை உருவாக்கியவர்.

அரசு ஊழியர்களுக்கு குடும்பப் பாதுகாப்பு திட்டம் கொண்டு வந்தவர். ஓய்வூதிய பணிக் காலத்தை 30 ஆண்டுகளாக நிர்ண யித்தவர்.

ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு இணையாக தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கியவர். மே தினத்திற்கு ஊதியத்துடன் விடுமுறை தந்தவர்.

மேதின நினைவுச் சின்னம் நிறுவியவர் என்று பல்வேறு சாதனைகளுக்கு சொந்தக்காரரர்.

நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு வரும் ஜுன் 3 அன்று தமிழ்நாட்டில் இயங்கி வரும் ஆலை வாயில்கள், அலுவலக வளாகங்கள், அமைப்பு சாரா தொழிலாளர்கள் கூடும் இடங்களில் தொ.மு.ச. பேரவை கொடியினை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்குவதோடு வாய்ப்புள்ள அமைப்புகளின் சார்பாக நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாவை சிறப்பாகக் கொண்டாட வேண்டுமாய் தொ.மு.ச. பேரவை சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### த.வெ.க. அரசின் நிர்வாக சீர்கேட்டால்

# திருவள்ளூர் மாவட்டத்தில் பல மணி நேரம் அறிவிப்பின்றி மின்வெட்டு!

## பொதுமக்கள் சாலை மறியல்!



திருவள்ளூர், மே 24 -

த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் அடுத்த கடம்பத்தூர் பகுதியில் உள்ள அம்பேத்கர் நகர், சர்ச் தெரு, கால்நடை மருத்துவமனை தெரு, ஏழில் நகர், வஜ்ர வேல் நகர் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில் கடந்த சில நாட்களாக இப்பகுதிகளில் முறையான மின்சார விநியோகம் நடைபெறாததால் பொதுமக்கள் கடும் அவதியடைந்து வருகின்றனர்.

பகல் மற்றும் இரவு நேரங்களில் தொடர்ந்து மின்தடை ஏற்பட்டதால் அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக இரவு நேரங்களில் மின்சாரம் இல்லாததால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படுகிறது.

இதனைக் கண்டித்து நேற்று முன்தினம் இரவு கடம்பத்தூர் பகுதியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள், திருவள்ளூர் அடுத்த கடம்பத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரே சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இரண்டு நாட்களாக மின்சாரம் வழங்காததை கண்டித்தும், பழுதடைந்த டிரான்ஸ்பார் மரை உடனடியாக சீரமைத்து சீரான மின்சாரம் வழங்க வேண்டும் என வலியுறுத்தியும் போராட்டம் நடைபெற்றது.

இந்த சாலை மறியல் காரணமாக அந்த வழியாகச் சென்ற வாகனங்கள் சாலையின் இருபுறங்களிலும் நீண்ட வரிசையில் காத்திருந்ததால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

அதேபோல் திருவள்ளூர் மாவட்டம் திருவலாங்காடு பகுதியில் 15 மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த அறிவிக்கப்படாத மின்வெட்டால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் திருவலாங்காடு - அரக்கோணம் சாலையில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# மணலியில் கழக கல்வெட்டு மற்றும் கொடிக்கம்பம்!

மாதவரம், மே.23–

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்டம் மணலி புதுநகர் திருவள்ளுவர் சிலை எதிரே திமுகவிற்கு சொந்தமான கல்வெட்டு மற்றும் கொடிக்கம்பத்துடன் அமைக்கப்பட்ட பீடம் உள்ளது.

இதன் அருகிலேயே தொழிலாளர் முன்னேற்ற சங்க ஆட்டோ ஓட்டுனர் சங்க கொடி கம்பமும் பெயர் பலகையும் வைக்கப்பட்டுள்ளது. இந்த இரு கொடிக்கம்பங்களும் காலகாலமாக அங்கேயே இருந்து வருவதாகும். இந்நிலையில் இக்கொடி கம்பத்திற்கு பின்புறம் கட்டப்பட்டு வரும் கட்டிடத்திற்கு ஆதரவாக திமுக கழகத்தின் கொடிக்கம்பமும், கல்வெட்டும், தொழிலாளர் முன்னேற்ற சங்க ஆட்டோ ஓட்டுனர் பெயர் பலகையும் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் ஊழியர்களால் தகவல் தெரிவிக்காமல் முன் அறிவிப்பு எதுவும் இன்றி அகற்றப்பட்டது .

தகவல் அறிந்த மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையிலான திமுகவி னர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு கொடிக்கம்பத்தையும், கல்வெட்டையும் அந்த இடத்திலேயே வைக்க வேண்டும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 2 அதிகாரிகள் தேவேந்திரன் மற்றும் உதவி பொறியாளர் விஜய் ஆகியோரிடம் பேசினர். பின்னர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மணலி புதுநகர் காவல் நிலைய ஆய்வாளர் ஆறுமுகம் அதிகாரிகளிடம் மற்றும் கழகத்தினரிடம் பேசி மேற்படி கல்வெட்டை எடுக்கப்பட்ட இடத்திலேயே வைக்க சமாதானம் உடன்படிக்கை ஏற்பட்டது. இதனை தொட ர்ந்து கழகத்தினர் ஜேசிபி இயந்திரம் மூலம் மீண்டும் கொடிக்கம்பத்தில் கல்வெட்டு தூண் வைத்து அதில் கழககொடியை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்றி வைத்தார்.

அதேபோல தொழிலாளர் முன்னேற்ற சங்க ஆட்டோ ஓட்டுனர் சங்க பெயர் பலகையையும் கழகக் கொடியையும் ஆட்டோ ஓட்டுனர் சங்க நிர்வாகிகள் ஏற்றி வைத்தார்கள்.

நிகழ்வில் 16வது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன், கவுன்சிலர் ஆ ராஜேந்திரன், வட்ட நிர்வாகிகள் கே. ஏ ரமேஷ், காமராஜ் புரம் கிருபாகரன் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

### தி.மு.க. விவசாய அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 26.05.2026 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள்
2. கழக ஆக்கப்பணிகள் குறித்து.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 22.05.2026.

**ஏ.கே.எஸ். விஜயன்**
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

**சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி - 25.05.2026**

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கான்ஸ்டன்டைன் ரவீந்தரன் எம்.பி., இ.பரந்தாமன் ஆகியோர் கள ஆய்வு செய்கின்றனர்.

| வ.எண். | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | நேரம் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 1 | சோளிங்கர் நகரம்<br>சோளிங்கர் வடக்கு<br>சோளிங்கர் கிழக்கு<br>சோளிங்கர் மேற்கு<br>சோளிங்கர் மத்திய | காலை 10,00 | MSV மஹால்,<br>சோளிங்கர் |
| 2 | காவேரிபாக்கம் தெற்கு<br>காவேரிபாக்கம் வடக்கு<br>காவேரிபாக்கம் பேரூர் | காலை 12,00 | வன்னியசத்திரம்,<br>காவேரிப்பாக்கம் |
| 3 | நெமிலி தெற்கு<br>நெமிலி வடக்கு<br>பனபாக்கம் பேரூர்<br>நெமிலி பேரூர் | மாலை 3,00 | வெங்கடேச<br>பெருமாள் பார்ட்டி<br>ஹால், ரெட்டிவலம் |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 23,05,2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக் கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 101 – தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி மற்றும் 102 – காங்கேயம் சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகளை சந்தித்து கருத்துகளை கேட்பதற்கென்று தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட கழக துணை அமைப்புச் செயலாளர், வழக்கறிஞர் ப.தாயகம் கவி, கழக சட்டத்துறை துணைச் செயலாளர் வழக்கறிஞர் மருது.கணேஷ், ஆகியோர் நம்முடைய திருப்பூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதி வாரியாக காலையில் கழக நிர்வாகிகளும் மாலையில் அணிகளின் நிர்வாகிகளும் பங்கேற்க வேண்டும்.

101 – தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதிக்கு தாராபுரம் ரோட்டரி மஹாலில்

102 – காங்கேயம் சட்டமன்ற தொகுதிக்கு காங்கேயம், பழையகோட்டை ரோடு, செந்தூர் மஹாலில்

கீழ்க்கண்ட விவரப்படி கீழ்க் காணும் நாட்களில் நேரில் வருகை தந்து கழக நிர்வாகிகள் அனைவரையும் தனித்தனியாக சந்தித்து பேசி சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து விரிவாக ஆய்வு செய்ய உள்ளனர்.

25.05.2026 காலை 9.30 மணி மற்றும் மாலை 4.00 மணி தாராபுரம் சட்டமன்றத் தொகுதி

26.05.2026 காலை 9.30 மணி மற்றும் மாலை 4.00 மணி காங்கேயம் சட்டமன்றத் தொகுதி

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 23.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.